

தாராபுரம் இடைத்தேர்தலை யொட்டி, தி.மு.க. வேட்பாளர் எஸ். சுகன்யாவை ஆதரித்து, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் சல்மா, தாராபுரம் மாநகர அவைத் தலைவர் கதிரவன், மாவட்ட அவைத் தலைவர் கோவிந்தராஜ், திருச்சி தெற்கு மாவட்ட ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ராமசாமி, ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யா அவர்களுக்கு வீடு வீடாக சென்று கடந்த திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வாக்குகள் சேகரித்தார்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து குண்டடம் மேற்கு ஒன்றியம், நந்தவனம்பாளையம் ஊராட்சி காணிக்கம்படி பகுதியில் கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்செல்வன் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் பகுதி கழக பொறுப்பாளர் டெம்போ சிவா, மாநகர் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சா.கார்த்திகேயன் உள்ளனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா அவர்களுக்கு ஆதரவாக. புதுக்கோட்டை தெற்கு மாநகரப் பொறுப்பாளர் வே.ராஜேஷ் தலவாய்பட்டினம் ஊராட்சி ஊத்துப்பாளையம் பகுதியில் உள்ள தோட்ட வீடுகளுக்கு நேரில் சென்று தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்!

தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

ஈ.ராஜா எம்.எல்.ஏ. சகோதரர் ஈ.பாலமுருகன் மறைவு!

கழகத்தினர் நேரில் அஞ்சலி!



தென்காசி, அக். 5- கழக மூத்த முன்னோடி ஈஸ்வரன் புதல்வரும் தென் காசி வடக்கு மாவட்ட செயலாளர் - வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா அவர்களின் அண்ணன் தென் காசி 31வது நகர் மன்ற உறுப்பினர் ஈ.பாலமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (03.10.2026 சனிக்கிழமை) தென் காசி சிந்தாமணியில் உள்ள இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று (04.10.2026 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணியளவில் நடைபெற்றது.

ஈ.பாலமுருகன் அவர்கள் மறைந்த செய்தி அறிந்ததும் கழக நிர்வாகிகள் அன்னாரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி (KMBF) நிறுவனம்

சட்டரீதியாகச் செயல்படுவதை தமிழ் நாடு அரசு உறுதி செய்திட வேண்டும்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

சென்னை, அக்.5- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் இது குறித்து, விடப்பட்டுள்ள ஊடகங்களுக்கான செய்தி வருமாறு:-

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் மாநகரை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி (KMBF) நிறுவனம் கடந்த 1903 முதல் இயங்கி வரும் 123 ஆண்டு கால பாரம்பரியம் கொண்ட தனியார் நிதி நிறுவனம் ஆகும்.

நாடு முழுவதும் 156 கிளைகள் உள்ளன. 12 லட்சத்திற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் இந்நிறுவனத்தில் பங்குகளை வைத்துள்ளனர்.

1,500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர்.

இயக்குநர் குழுத் தேர்தலில் தற்போதைய நிர்வாகம் மீண்டும் வெற்றி பெற்றதாக தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், சில சக்திகள் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை உருவாக்குவது கவலையளிக்கிறது.

ஜனநாயக முறையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அந்நிதி நிறுவனத்தின் தலைவர், செயலாளர் மற்றும் இயக்குநர்கள் சட்டப்பூர்வமாக செயல்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும்.

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, புதிய நிர்வாகிகளின் பணி தொடர்ந்து நடைபெற தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்வு செய்யப்பட்டுள்ள நிர்வாகிகள் மீது வழக்குகள் பதிந்து கைது செய்து அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் காவல்துறை ஈடுபடக் கூடாது. அதிகார அத்துமீறல்களுக்கு சிறிதும் அனுமதி அளிக்கக்கூடாது.

கும்பகோணம் மாநகரில் செயல்பட்டு வரும் மத்திய அலுவலகம் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களின் பாதுகாப்பு உறுதி படுத்தப்பட வேண்டும்.நிறுவனத்தின் நன்மதிப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

பங்குதாரர்கள் மற்றும் உறுப்பினர்களின் முதலீடுகள், உரிமைகள், நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நிர்வாக முடிவுகள் அனைத்தும் சட்டம் மற்றும் நிறுவன விதிகளுக்கு உட்பட்டே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை உறுதி செய்திட முன்வர வேண்டும் என தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியன் தமழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

ஆசிய விளையாட்டு கிரிக்கெட் போட்டி:

தங்கப் பதக்கத்தை வென்றது இந்தியா!

நிஷின், அக்.5- ஜப்பானில் ஆசிய விளையாட்டு போட்டிகள் நடந்து வருகின்றன. ஆண்கள் கிரிக்கெட்டில் இன்று இறுதிப் போட்டி நடைபெற்றது.

நேற்று காலை 10 மணியளவில் தொடங்கிய இறுதிப்போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் ஷ்ரேயஸ் அய்யர் பேட்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி, முதலில் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 211 ரன்கள் குவித்தது. தொடக்க வீரர் அபிஷேக் சர்மா அதிரடியாக ஆடி 28 பந்தில் 61 ரன்கள் குவித்தார்.

இதையடுத்து, 212 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. 39 ரன்னுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்தது பாகிஸ்தான்.

கடைசி வரை போராடிய ஹாசன் நவாஸ் 96 ரன்னில் அவுட்டானார்.

இறுதியில், பாகிஸ்தான் அணி 6 விக்கெட் இழப்புக்கு 192 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் இந்திய அணி 19 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றி அசத்தியது.

தோல்வி அடைந்த பாகிஸ்தான் வெள்ளிப் பதக்கம் வென்றது.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(02.10.2026 - 3.10.2026)

1. ராணிப்பேட்டை மாவட்டம் கலவை அருகே விடுதலைச் சிறுத்தை கட்சி நிர்வாகி ஓட ஓட விரட்டி வெட்டிக்கொலை ....



2. புதுக்கோட்டை இந்திரா நகரில் ஆறு மாத கர்ப்பிணி பெண் கொடூர கொலை .....

3. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே அசாம் மாநில தொழிலாளி கழுத்தை அறுத்து படுகொலை ...

4. தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் மாயமான மூதாட்டி எரிந்த நிலையில் பிணமாக மீட்பு ...

5. சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் இருந்து கஞ்சா வழக்கில் சிக்கிய கைதி தப்பி ஓட்டம்...



6. செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் அருகே, வீட்டில் தனியாக இருந்த பெண்ணின் கழுத்தை நெறித்து நகைகளை கொள்ளையடிக்க முயற்சி...

7. காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகே தன்னை பிடிக்க வந்த போலீசாரை வெட்டி விட்டு தப்ப முயன்ற ரவுடி சுட்டு பிடிப்பு...

8. சென்னை நம்மாழ்வார் பேட்டையில் இளம் பெண்ணிடம் சில்மிஷம் செய்த ஜிம் மாஸ்டர் சிக்கினார் ...

9. சென்னை வேளச்சேரியில் வீட்டில் தனியாக இருந்த பெண்ணை கத்தி முனையில் மிரட்டி கொள்ளை முயற்சி.



10. செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி அருகே ரியல் எஸ்டேட் அதிபர் வீட்டு பூட்டை உடைத்து தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் திருட்டு ...

11. சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் கையில் கத்தியுடன் சுற்றி பொதுமக்களை அச்சுறுத்திய வாலிபர் சிக்கினார்...

12. தஞ்சையில் அம்மன் கோவிலில் அம்மன் கழுத்தில் இருந்த தாலி திருட்டு ...

13. விழுப்புரம் மாவட்டம் கோட்டக்கரை கிராமத்தில் அடுத்தடுத்த கோவில்களில் சாமி சிலைகள் திருட்டு ...



14. விழுப்புரம் மாவட்டம் வளவனூர் அருகே அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களிடையே மோதல், இரண்டு பேர் படுகாயம் ...

15. நெல்லை பாளையங்கோட்டையில் ஹோட்டலில் தகராறு செய்தவர்களை தட்டிக்கேட்ட ஓட்டல் ஊழியரை வழிமறித்து சரமாரியாக தாக்குதல் நடத்திய கும்பல் ...

16. சென்னை, பெரம்பூர், கூடுவாஞ்சேரி, தாம்பரம், வியாசர்பாடி அம்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் கஞ்சா தாராள புழக்கம் ...

17. சென்னை கிழக்கு கடற்கரை சாலை அக்கரையில் பிரபல உணவகத்தில் 15 செல்போன்கள் திருட்டு ...

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க. மூர்த்தி

அக்டோபர் 5 (2001)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே கழகத்தில் இணைந்து பணியாற்றியதோடு, வேலூர் மாவட்ட அவைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் பேரூராட்சி தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.


இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

து.ப. அழகமுத்து

அக்டோபர் 5 (1987)



பழம்பெரும் சுயமரியாதை இயக்க செயல்வீரரும் – திருச்சி மாவட்டத்தில் கழகத்தை கட்டி வளர்த்த ஆரம்பகால தலைவர்களில் ஒருவர்.

1962ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – தி.மு.கழக அரசில் அரசு கொறடாவாகவும் பணியாற்றியவர்.

1952 முதல் 1955 வரை ஊராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.

1955ல் கருப்புக் கொடி போராட்டத்தில் கலந்து கொண்டவர். 1964ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

கழக நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.